# ஐந்தாவது இந்தியா-ஜப்பான் சைபர் உரையாடல்

செப்டம்பர் 14, 2023

ஜப்பான் ஐந்தாவது இந்தியா-ஜப்பான் சைபர் உரையாடலை டோக்கியோவில் 14 செப்டம்பர் 2023 அன்று நடத்தியது. இந்தியப் பிரதிநிதிகள் குழு வெளியுறவு அமைச்சக ராஜதந்திர பிரிவு இணைச் செயலர் திருமதி முவன்புய் சாய்யவி தலைமையிலும், ஜப்பானிய பிரதிநிதிகள் குழு ஜப்பானின் வெளியுறவு அமைச்சகத்தின் சைபர் கொள்கையின் தூதர் திரு இஷிசுகி ஹிடியோ தலைமையிலும் கலந்து கொண்டனர்.

இந்திய பிரதிநிதிகள் குழுவில் வெளியுறவுஅமைச்சகம், உள்துறை அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், தொலைத்தொடர்பு துறை இந்திய கணினி அவசரநிலைப் பதில் குழு தேசிய முக்கியமான தகவல் உள்கட்டமைப்பு பாதுகாப்பு மையம் மற்றும் டோக்கியோவில் உள்ள இந்திய தூதரகம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள் இருந்தனர். ஜப்பானிய தூதுக்குழுவில் சைபர் பாதுகாப்புக்கான தேசிய மையம், உள் விவகாரங்கள் மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம், வெளியுறவு அமைச்சகம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளின் மூத்த அதிகாரிகள் இடம் பெற்றிருந்தனர்.

இருதரப்பு இணைய ஒத்துழைப்பின் முக்கிய பகுதிகள் குறித்து இரு தரப்பும் விவாதித்தனர் மற்றும் இணைய பாதுகாப்பு மற்றும் 5ஜி தொழில்நுட்பம் உட்பட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில் அடைந்த முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தனர். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் குவாட் கட்டமைப்பின் கீழ் உள்ள மற்ற பலதரப்பு மற்றும் பிராந்திய மன்றங்களில் இணைய டொமைன் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து இரு தரப்பினரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். இரு தூதுக்குழுக்களும் பாதுகாப்பான இணையவெளியை உறுதி செய்வதில் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டி, இந்த அம்சத்தில் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டனர்.

பரஸ்பரம் வசதியான தேதியில் 2024இல் புது தில்லியில் ஆறாவது இந்தியா-ஜப்பான் சைபர் உரையாடலுக்கு ஜப்பானிய தரப்பிறகு இந்தியத் தரப்பு அழைப்பு விடுத்தது.

**டோக்கியோ, ஜப்பான்**
**செப்டம்பர் 14, 2023**